



## சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

# கலை மற்றும் பண்பாடு
# அருங்காட்சியகங்கள்
# தொல்லியல்

### மானியக் கோரிக்கை எண். 29

## அறிவிப்புகள்
## 2021–2022

# சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை

## கலை மற்றும் பண்பாடு

## அருங்காட்சியகங்கள்

## தொல்லியல்

### மானியக் கோரிக்கை எண். 29

### அறிவிப்புகள்
### 2021 – 2022

**தங்கம் தென்னரசு**
**தொழில்துறை அமைச்சர்**

©
தமிழ்நாடு அரசு
2021

# கலை பண்பாட்டுத் துறை

# அறிவிப்புகள்

# 2021–2022

**1. 75-வது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவினை கொண்டாடும் நோக்கிலும், நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு உதவிடும் வகையிலும், தமிழகத்தின் நாட்டுப்புறக் கலைகளை 75 ஒளிப்படங்களாக (Video) தயாரித்து இணைய வழியில் வெளியிடுதல்.**

சுதந்திர இந்தியாவின் 75-வது சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவினை சீரிய வகையில் கொண்டாடும் நோக்கிலும், நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு உதவிடும் வகையிலும், தமிழகத்தின் நாட்டுப்புறக் கலைகளை உலகம் முழுவதும் கொண்டு செல்லும் பொருட்டும், தமிழகத்தின் நாட்டுப்புறக் கலைகளை 75 ஒளிப்படங்களாக (Video) தயாரித்து இணைய வழியில் வெளியிடப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக, கலை பண்பாட்டுத் துறையின் ஆண்டு வரவு செலவு ஒதுக்கீட்டிலிருந்து ரூ. 164 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**2. தமிழக பாரம்பரியக் கலைகள் இடம்பெறும் வகையில் தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையினையொட்டி ஆண்டுதோறும் சென்னையில் பிரம்மாண்ட கலை விழா (இணைய வழி மூலமும்) நடத்துதல்.**

தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையினையொட்டி, தமிழகத்தினைச் சார்ந்த பாரம்பரியக் கலைகளின் சிறப்பினை வெளிப்படுத்தும் வகையில், திரளான கலைஞர்கள் பங்கு பெறும் பிரம்மாண்ட கலைவிழா, பெருநகர சென்னை மாநகராட்சி, செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை, தகவல் தொழில் நுட்பத்துறை போன்ற பல்வேறு துறைகளின் ஒத்துழைப்புடன், ஆண்டுதோறும் சென்னையில் 6 இடங்களில் (இணைய வழி மூலமும்) மூன்று நாட்கள் நடத்தப்படும். இதற்கென, தொடரும் செலவினமாக, கலை பண்பாட்டுத் துறையின் ஆண்டு வரவு செலவு ஒதுக்கீட்டிலிருந்து ரூ.91 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.



**3. இளங்கலைஞர்களின் கலைத் திறமைகளை வெளிக்கொணர ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட / மாநிலக் கலைப்போட்டிகள் நடத்துதல் மற்றும் இளையோருக்கான மாநிலக் கலை விழா (இணைய வழி மூலமும்) நடத்துதல்.**

இளங்கலைஞர்களிடையே மறைந்து கிடக்கும் கலைத் திறமைகளை வெளிக்கொணரவும், அவர்களை ஊக்கப்படுத்தவும் மாநிலக் கலை விழா (இணைய வழி மூலமும்) நடத்தப்படும். குரலிசை, ஓவியம், பரதநாட்டியம், கிராமிய நடனம், கருவியிசை ஆகிய ஐவகைக் கலைகளில், 16 வயது முதல் 35 வயதிற்குட்பட்ட இளைஞர்களுக்கு, மாவட்ட அளவிலும் / மாநில அளவிலும் போட்டிகள் நடத்தி வெற்றி பெற்றவர்களுக்கு, மாநிலக் கலை விழாவில் பரிசுகள் வழங்கப்படும். இதற்கென, தொடரும் செலவினமாக, ரூ. 75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**4. 500 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு ரூ.10,000/- மதிப்பீட்டில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக ஆண்டுதோறும் இசைக்கருவிகள், ஆடை ஆபரணங்கள் வாங்க நிதியுதவி வழங்குதல்.**

தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற கலைஞர்கள் பயன்பெறும் வகையில், நபர் ஒருவருக்கு ரூ. 10,000/- மதிப்பீட்டில், இசைக்கருவிகள் மற்றும் ஆடை ஆபரணங்கள் வாங்க 500 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு ஆண்டுதோறும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் நிதியுதவி வழங்கிட, தொடரும் செலவினமாக ரூ. 50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.



**5. கலைமாமணி விருது பெற்ற வறிய நிலையில் வாழும் கலைஞர்களுக்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் ஒருமுறை வழங்கப்படும் பொற்கிழித் தொகை ரூ. 50,000/- லிருந்து ரூ.1,00,000/- ஆக உயர்த்துதல்.**

கலைமாமணி விருது பெற்றவர்களில், வயோதிக நிலையில், பொருளாதாரத்தில் நலிந்து இன்னலில் வாழ்கின்ற கலைஞர்கள் பயன்பெறும் வகையில், ஆண்டுதோறும், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் வாயிலாக, தற்போது வழங்கப்படும் பொற்கிழித் தொகை ரூ. 50,000/- லிருந்து ரூ. 1,00,000/- ஆக உயர்த்தி 10 கலைஞர்களுக்கு வழங்கப்படும். இதற்கென தொடரும் செலவினமாக ரூ. 10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**6. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் நடத்தப்படும் முத்தமிழ் முகாம் பயிற்சிக்கான தொகையை உயர்த்துதல்.**

முத்தமிழான இயல், இசை, நாடகம் ஆகிய மூன்று பிரிவுகளில் தலை சிறந்த படைப்பாளிகளைக் கொண்டு பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர் மற்றும் இளைய தலைமுறையினருக்கு பயிற்சிகள் அளிக்கும் நோக்கில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் முத்தமிழ் முகாம் திட்டத்தின் கீழ், ஒரு கலைப் பிரிவிற்கான ஒதுக்கீட்டுத் தொகை ரூ. 75,000/- லிருந்து ரூ. 2,00,000/- ஆக உயர்த்தப்படும். இதற்கென, கூடுதலாக ரூ.3.75 இலட்சம் தொடரும் செலவினமாக நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.



**7. கலை பண்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் சார்நிலை அலுவலகங்கள், கல்லூரிகள், மாவட்ட அரசு இசைப் பள்ளிகள் ஆகியவற்றிற்கு கணினிகள், அச்சு இயந்திரங்கள், ஒளியச்சு இயந்திரங்கள் கொள்முதல் செய்தல்.**

கலை பண்பாட்டுத் துறையின் தலைமை அலுவலகம், ஏழு மண்டல கலை பண்பாட்டு மைய அலுவலகங்கள், நான்கு அரசு இசைக்கல்லூரிகள், இரண்டு அரசு கவின் கலைக் கல்லூரிகள், அரசினர் கட்டட மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி, 17 மாவட்ட அரசு இசைப்பள்ளிகள் ஆகியவற்றின் அலுவலகப் பயன்பாட்டிற்கு, 45 எண்ணிக்கையிலான கணினிகள், அச்சு இயந்திரங்கள் (Multi function printer), பல வண்ண ஒளியச்சு இயந்திரங்கள் (Multi colour Photocopier Machines) மற்றும் தொடர்புடைய பிற உபகரணங்கள் ஆகியவற்றினை வாங்கிட, தொடராச் செலவினமாக ரூ. 44 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**8. வாடகை கட்டடத்தில் இயங்கி வரும் கரூர் மாவட்ட அரசு இசைப்பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டுதல்.**

கலை பண்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ், 17 மாவட்ட அரசு இசைப்பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. வாடகை கட்டடத்தில் இயங்கி வரும் கரூர் மாவட்ட அரசு இசைப்பள்ளிக்கு, கரூர் மாவட்டம் தாந்தோணி கிராமம் புல எண். 582-C-ல், 0.30.00 ஏர்ஸ் நிலப்பரப்பில், சொந்த கட்டடம் கட்டுவதற்கு தொடராச் செலவினமாக ரூ. 160 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.



# அருங்காட்சியகங்கள் துறை

## அறிவிப்புகள்

## 2021–2022

**1. சென்னை அரசு அருங்காட்சியகத்தில் தொல்பொருளியல் தொகுப்புக் காட்சிக் கூடங்களை விரிவுபடுத்தும் விதமாக புதிய கட்டடம் கட்டி அரும்பொருட்களை பன்னாட்டு தரத்தில் காட்சியமைத்தல்.**

சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உலகப் புகழ்பெற்ற சோழர்கால ஐம்பொன் சிலைகள், அமராவதி சுண்ணாம்பு சிற்பங்கள், வரலாற்றுக்கு முந்தைய கால சேகரிப்புகள், ஆதிச்சநல்லூர் நாகரீக அரும்பொருட்களின் சேகரிப்புகள், பல்வேறு மன்னராட்சி கால நாணயங்கள் முதலியன காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. தற்போது தொல் பொருளியல் தொகுப்புக் காட்சிக் கூடங்களை விரிவுபடுத்தும் விதமாக ஒரு புதிய கட்டடம் கட்டி சேமிப்பில் உள்ள அரும்பொருட்களை பன்னாட்டு தரத்தில் காட்சியமைக்க தொடராச் செலவினமாக ரூ.22.81 கோடி ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படும்.

**2. சென்னை அரசு அருங்காட்சியக சிறுவர் அருங்காட்சியகத்தை விரிவுபடுத்தி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியை விளக்கும் விதமாக அறிவியல் மையம் (Science Centre) அமைத்தல்.**

சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் அண்மைக் கால தொழில்நுட்பங்களை விளக்கிக் கூறும் வகையில் அறிவியல் மையம் (Science Centre) அமைக்கும் பணி கொல்கத்தாவில் இயங்கிவரும் அறிவியல் அருங்காட்சியகங்களின் தேசிய கூட்டமைப்பு (National Council of Science Museum) மூலம் மேற்கொள்ளப்பட உள்ளது. இதற்கான புதிய கட்டடம் மற்றும் காட்சியமைப்பு பணிகள் ஒன்றிய மற்றும் மாநில அரசு பங்கீட்டுத் திட்டத்தின் கீழ் (50:50 என்ற விகிதத்தில்) ரூ.22.40 கோடி நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படும்.



**3. அரசு அருங்காட்சியகங்களில் உள்ள அனைத்து அரும்பொருள்களையும் அறிவியல் முறையில் பாதுகாத்து, எண்ணிலக்கம் செய்து, (Digitization) ஆவணப்படுத்தி, அனைத்தையும் மெய்நிகர் காட்சிக்கூடங்களாக (Virtual Museum) வடிவமைத்து வலைதளத்தில் பதிவேற்றுதல்.**

சென்னை அரசு அருங்காட்சியகம் மற்றும் 23 மாவட்ட அருங்காட்சியகங்கள் வரலாற்று சிறப்புமிக்க அரும்பொருட்களை காட்சிப்படுத்தி பொதுமக்களுக்கு கல்வி, அறிவியல், தொழில்நுட்பம், கலாச்சாரம் மற்றும் பண்பாடு குறித்த தகவல்களை வழங்கி வருகின்றன. இவற்றை அறிவியல் முறையில் பாதுகாத்து எண்ணிலக்கம் செய்து (Digitization) ஆவணப்படுத்தி மெய்நிகர் காட்சிக்கூடங்களாக (Virtual Museum) வடிவமைத்து, வலைதளத்தில் பதிவேற்றும் பணி ரூ.5 கோடி மதிப்பீட்டில் தொடராச் செலவினமாக ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படும்.

**4. அருங்காட்சியகங்கள் துறையின் காப்பாட்சியர்கள் மற்றும் உயர் அலுவலர்களுக்கு இந்திய மற்றும் உலகளவில் சிறப்பு பெற்ற அயல்நாட்டு அருங்காட்சியகங்களில் திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தல்.**

அருங்காட்சியகத் துறையின் உலகளாவிய வளர்ச்சியை கருத்தில் கொண்டு அருங்காட்சியகத் துறையில் பணிபுரியும் காப்பாட்சியர்கள் மற்றும் உயர் அலுவலர்களுக்கு உலகத் தரம் பெற்ற பல்வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அருங்காட்சியகங்களைப் பார்வையிடவும், திறன் மேம்பாட்டு பயிற்சி பெறவும் 2021, 2022 மற்றும் 2023 ஆகிய மூன்றாண்டு காலத்திற்கு தொடர்ந்து பல நிலைகளில் வாய்ப்புகள் உருவாக்கப்படும். இதற்கென, தொடராச் செலவினமாக ரூ. 2 கோடி ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படும்.



**5. அரியலூர் புதையுயிரி படிவ அருங்காட்சியக வளாகத்தில் கருப்பொருள் பூங்கா (Theme Park) அமைத்தல்**

அரியலூர் புதையுயிரி அருங்காட்சியகம் 48.84.5 ஹெக்டேர் நிலப் பரப்பில் அமைந்துள்ளது. சுமார் 165 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் இப்பகுதி கடல் சூழ்ந்து இருந்தது. பின்னர் புதையுயிரி படிவங்கள் உருவாகியுள்ளன. இவற்றை அனைவரும் கண்டுணரத் தக்க வகையிலும் இதன் முக்கியத்துவத்தை உலகளவில் ஆய்வு செய்யத்தக்க வகையிலும், தானியங்கி டைனோசர் மாதிரிகளைக் கொண்டு திறந்தவெளியில் கருப்பொருள் பூங்கா (Theme Park) ரூ. 10 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும், இதற்கென, தொடராச் செலவினமாக ரூ.9.85 கோடியும், தொடரும் செலவினமாக ரூ.0.15 கோடியும் அரசு மற்றும் தனியார் நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படும்.

## 6. தேசிய கலைக் கூட கட்டடத்தின் மேல் லேசர் 3D ஒலி ஒளி காட்சியமைத்தல்.

சென்னை அரசு அருங்காட்சியக வளாகத்தில் 1909 ஆம் ஆண்டு இந்தோ சார்சானிக் கட்டிடக் கலை வடிவத்தில் கட்டப்பட்டுள்ள பாரம்பரிய வேலைப்பாடுகள் மிகுந்த தேசிய கலைக் கூடம் அமைந்துள்ளது. இக்கட்டிடத்தின் கலை வடிவங்களின் மேல் லேசர் தொழில்நுட்ப 3D ஒலி ஒளி காட்சியமைத்து தமிழ்நாட்டின் வரலாறு மற்றும் பண்பாடு குறித்த தகவல் அடங்கிய கண்கவர் நிகழ்ச்சிகள் ரூ. 8 கோடி மதிப்பீட்டில் நடத்தப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ரூ.7.85 கோடியும் தொடரும் செலவினமாக ரூ.0.15 கோடியும் அரசு மற்றும் தனியார் நிதிபங்களிப்புடன்நடத்தப்படும்.



## 7. சோழப் பேரரசின் மரபு மற்றும் தொன்மையை விளக்கும் 'அன்பில்' செப்பேடுகளை கண்டுணர்ந்து சென்னை அரசு அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்துதல்.

சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உலகப் புகழ்பெற்ற சோழர்கால ஐம்பொன் சிலைகள் மற்றும் செப்பேடுகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இந்திய தொல்லியல் துறையின் அதிகாரப்பூர்வ வெளியீடுகளில் ஒன்றான 'எபிக்ராபியா இண்டிகா', சோழ மன்னர் சுந்தர சோழர் வெளியிட்ட 'அன்பில் செப்பேடுகளை' பற்றி குறிப்பிடுகிறது. இச்செப்பேடு சோழ அரசர்களின் பரம்பரை குறித்த தகவல்களை கி.மு. 300 முதல் கி.பி. 1279 வரை வரிசைப்படுத்தியுள்ளது. இச்செப்பேடுகளை இந்திய தொல்பொருள் துறை மூலமாக கண்டுணர்ந்து பாதுகாத்து சென்னை அரசு அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்படும்.

8. **தமிழ்நாட்டின் வரலாறு மற்றும் பாரம்பரியத்தை உலகறியச் செய்யும் வகையில் 'லெய்டன்' செப்பேடுகளை நெதர்லாந்து நாட்டிலிருந்து தமிழகத்திற்கு மீண்டும் திரும்பக் கொண்டு வருதல்.**

நெதர்லாந்து நாட்டில் உள்ள லெய்டன் பல்கலைக் கழகத்தில் பாதுகாக்கப்படும் " லெய்டன் செப்பேடுகள்" 11 ஆம் நூற்றாண்டில் வெளியிடப்பட்ட சோழப் பேரரசர் இராஜராஜ சோழனின் வரலாற்றையும் நாகப்பட்டினத்தில் இருந்த புத்த விகார பராமரிப்பிற்கான ஆதாரங்களையும் தருகிறது. இது பெரிய ஆனைமங்கல செப்பேடு ஆகும். பின்னர், குலோத்துங்க சோழர் மூலமாக புத்த விகார பராமரிப்பிற்கான சிறிய ஆனைமங்கல செப்பேடு வெளியிடப்பட்டது. இத்தகையச் சிறப்பு பெற்ற செப்பேடுகள் நெதர்லாந்து நாட்டில் உள்ளதை மீண்டும் தமிழகத்திற்கு திரும்பக் கொண்டு வர சீரிய முயற்சிகள் எடுக்கப்படும்.



# தொல்லியல் துறை

## அறிவிப்புகள்

## 2021–2022

1. **உலகத்தரம் வாய்ந்த கீழடி அகழ்வைப்பகத்திற்குத் தேவையான 34 நிரந்தரப் பணியிடங்களை தோற்றுவித்தல் மற்றும் பராமரிப்புகளுக்காக ரூ. 1.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்தல்.**

சிவகங்கை மாவட்டம், கீழடியில் உலகத் தரம் வாய்ந்த ஒரு புதிய அகழ்வைப்பக கட்டுமானப் பணிகள் ரூ.12.21 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இவ்வகழ்வைப்பகம் 31,000 சதுர அடியில், ஆறு அரங்குகளுடன் கீழடியின் தொன்மை மற்றும் தமிழர்களின் பண்பாட்டினை உலகிற்கு உணர்த்தும் வண்ணம் உருவாக்கப்பட்டு வருகின்றது. இவ்வகழ்வைப்பகத்திற்கு 34 நிரந்தரப் பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும். அகழ்வைப்பக பராமரிப்பு பயன்பாட்டிற்கு தொடரும் செலவினமாக ரூ. 1.38 கோடியும், தொடராச் செலவினமாக ரூ. 0.20 கோடியும் ஆக மொத்தம் ரூ. 1.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 2. மறுசீரமைக்கப்பட்ட தொல்லியல் நிறுவனத்தில் புதியதாக கல்வெட்டியலில் ஈராண்டு முதுநிலை பட்டய வகுப்பு துவங்குதல்

தொல்லியல் துறையில் மறுசீரமைக்கப்பட்டு இயங்கி வரும் தொல்லியல் நிறுவனத்தில் புதியதாக கல்வெட்டியலில் ஈராண்டு முதுநிலைப் பட்டய வகுப்பு துவங்கப்படும். இப்புதிய முதுநிலைப் பட்டய வகுப்பில் கல்வெட்டியல் தொடர்பான அனைத்துப் பாடங்களும் செய்முறைப் பயிற்சிகளும் கல்வெட்டு வல்லுநர்களைக் கொண்டு அளிக்கப்படும். மேலும், ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ஒன்றிற்கு பயிலுதவித் தொகையாக ரூ.5,000/- வழங்கப்படும். இவ்வகுப்பு, 2021-2022 ஆம் நிதியாண்டு முதல் துவங்கிட ரூ. 40 இலட்சமும், 2022-2023 ஆம் ஆண்டில் புதிய 10 மாணவர்கள் சேர்க்கைக்கு ரூ. 40 இலட்சமும் என்ற வகையில் தொடரும் செலவினமாக மொத்தம் ரூ. 80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.



## 3. கல்வெட்டுகளைப் படியெடுத்தல் மற்றும் தொல்லியல் அகழாய்வுகளில் வெளிக் கொணரப்படும் தொல் பொருட்களை நவீன முப்பரிமாண நுண்ணொளி வரைவி (3D Scanner) கொண்டு ஆவணப்படுத்துதல்

பண்டைய நாகரிகங்களின் தொன்மை, வரலாறு, பண்பாடு முதலியவற்றை முழுமையாக வடிவமைத்து அறிந்து கொள்ள உதவும் முக்கியமான சான்றாகக் கல்வெட்டுகள் திகழ்கின்றன. வரலாற்றினை மறுகட்டமைப்பு செய்ய துணையாக உள்ள கல்வெட்டுகளைப் படியெடுக்கவும் தொல் பொருட்களை நேரடியாக முப்பரிமாண வடிவில் ஆவணப்படுத்தவும். நவீன தொழில் நுட்ப 3D ஸ்கேனர்கள், உயர்தர கணினிகள் மற்றும் உபகரணங்கள் வாங்கிட தொடராச் செலவினமாக ரூ.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 4. தமிழ்நாட்டிலுள்ள 90-க்கும் மேற்பட்ட பாறை ஓவியங்களை ஆவணப்படுத்துதல்.

தமிழ்நாட்டில் பரவலாகக் கண்டுபிடிக்கப்படும் பாறை ஓவியங்கள் தமிழ்நாட்டின் தொன்மைக்கு சான்று பகர்கின்றன. தமிழ்நாட்டில் கீழ்வாளை, செத்தவரை, ஆலம்பாடி, திருமலை, சிறுமலை, கரிக்கியூர், மயிலாடும்பாறை ஆகிய இடங்களில் உள்ள பாறை ஓவியங்கள் பண்டைய மக்களின் கலை ஈடுபாடு, சமூக வாழ்க்கை போன்றவற்றை அறிந்துகொள்ளும் காலக் கண்ணாடியாகத் திகழ்கின்றன. இப்பாறை ஓவியங்களை நவீன முறையில் ஆவணப்படுத்தி அடுத்த தலைமுறையினருக்கு எடுத்து செல்லும் நோக்கில், தமிழ்நாட்டிலுள்ள 90-க்கும் மேற்பட்ட பாறை ஓவியங்கள் ஆவணப்படுத்தப்படும். இதற்கென, 2021-2022 ஆம் ஆண்டு ரூ.20 இலட்சமும் 2022-2023 ஆம் ஆண்டு ரூ.40 இலட்சமும் என இரண்டு ஆண்டுகளுக்கு மொத்தம் ரூ.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.



## 5. தமிழ்நாட்டில் புதியதாக மூன்று இடங்கள் உட்பட ஏழு இடங்களில் தொல்லியல் அகழாய்வுகள் மற்றும் இரண்டு கள ஆய்வுகள் 2021-2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளுதல்.

தமிழ்நாட்டின் பண்பாட்டு வளமையை வெளிக் கொணர்வதற்கு தற்போது நடைபெற்று வரும் கீழடி, சிவகளை, மயிலாடும்பாறை, கங்கை கொண்ட சோழபுரம் ஆகிய அகழாய்வுகளுடன் புதியதாக விருதுநகர் மாவட்டம் - வெம்பக்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் - துலுக்கர்பட்டி, தர்மபுரி மாவட்டம் - பெரும்பாலை ஆகிய ஏழு இடங்களில் அறிவியல் அடிப்படையில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்படும். இவை தவிர புதிய கற்கால இடங்களைக் கண்டறிதல், தாமிரபரணி ஆற்றங்கரையில் உள்ள தொல்லியல் இடங்களை இனங்காணுதல் என்னும் இரண்டு அறிவியல் முறையிலான கள ஆய்வுகள் 2021-2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

6. **தமிழ்நாட்டில் புதியதாக ஐந்து பண்டைய தமிழ்க் கல்வெட்டுகள் பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவிக்கப்படும்.**

தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னங்களை பழமை மாறாமல், பாதுகாத்து வருங்கால தலைமுறையினருக்கு எடுத்துச் செல்வது தலையாயக் கடமையாகும். இந்த உயரிய நோக்கத்தினை நிறைவேற்றும் வகையில் மதுரை மாவட்டம் முதலைக்குளம் தமிழிக் கல்வெட்டுகள், மதுரை மாவட்டம் அரிட்டாப்பட்டி தமிழிக் கல்வெட்டுகள், சிவகங்கை மாவட்டம் பூலாங்குறிச்சி தமிழ்க் கல்வெட்டுகள், விழுப்புரம் மாவட்டம் தொண்டூர் தமிழிக் கல்வெட்டு, விழுப்புரம் மாவட்டம் நெகனூர்பட்டி தமிழிக் கல்வெட்டு ஆகிய ஐந்து கல்வெட்டுகளும் தமிழ்நாடு அரசின் பாதுகாக்கப்பட்ட சின்னங்களாக அறிவிக்கப்படும்.



7. **தொல்லியல் துறையின் கீழ் இயங்கும் தொல்லியல் நிறுவனத்தினை தமிழ்நாடு தொல்லியல் மற்றும் அருங்காட்சியகவியல் நிறுவனம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு மறுசீரமைத்தல்**

தமிழ்நாடு அரசு, தொல்லியல் துறையில் மறுசீரமைக்கப்பட்டு இயங்கி வரும் தொல்லியல் நிறுவனத்தினை தமிழ்நாடு தொல்லியல் மற்றும் அருங்காட்சியகவியல் நிறுவனம் (Tamil Nadu Institute of Archaeology and Museology) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு சீரமைக்கப்படும். இந்நிறுவனத்தின் மூலம் ஈராண்டு கால தொல்லியல் முதுநிலை பட்டய வகுப்பு நடைபெற்று வருகிறது. கூடுதலாக இவ்வாண்டு முதல் கல்வெட்டியலில் ஈராண்டு கால முதுநிலை பட்டய வகுப்பு துவங்கப்பட உள்ளது. மேலும், அருங்காட்சியகவியலில் பட்டய வகுப்பு நடத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**தங்கம் தென்னரசு**
**தொழில்துறை அமைச்சர்**